பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 13 செவ்வாய்க்கிழமை (30.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily ஒளி: 334

# ரஷ்யா, இஸ்ரேல், செக். ஆகியனவும்

# அரசின் போருக்கு உதவத் தயாராம்!

## சக்திமிக்க விமானங்களை வழங்கும்

கொழும்பு, ஒக்ரோபர் 30

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசின் போர் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா, இஸ்ரேல், செக்கோஸ்லாவாக்கிய ஆகிய மேற்கு நாடுகளும் உதவ முன்வந்திருக்கின்றன என்றும் -

ஏற்கனவே இலங்கைக்கு இது விடயத்தில் கைகொடுத்துவரும் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது உதவிகளை அதிகரிக்கவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடவடிக்கைகளில் வலிமை கூடிய வான்கலங்களை வழங்குவதற்கு ரஷ்யா உட்பட சில நாடுகள் முன்வந்திருக்கின்றன என்றுதெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீதான விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதலில் இலங்கை விமானப்படை கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளது என்று செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கையிலேயே, மேற்படி நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கின்றன என்ற தகவலைத் தென்னிலங்கை இணை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் ஞாயிறன்று மோதல்

கொழும்பு, ஒக்.30

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மன்னார், முருங்கன் பகுதியிலும் மோதல் இடம்பெற்றுள்ளது என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த மோதலில் 3 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### வங்கக்கடலில் தாழ்வு மண்டலம்

## தமிழகத்தில் தொடர் கனமழை புயல் அபாயம்! 15 பேர் பலி!!

சென்னை,ஒக்.30

தமிழகத்தில் தொடரும் கனமழை காரணமாக நேற்று வரை 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புயல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் நேற்று மூடப்பட்டன.

வேளச்சேரியில் பள்ளி மாணவன் உட்பட இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர். தொடர்ந்து பெய்துவரும் மழையால் பல இடங்களில் ஏற்பட்ட விபத்துச்சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மொத்தம் 15 ஆக உயர்ந்துள்ளது.

வடக்கு - கிழக்கு பருவப்பெயர்ச்சிக் காலமான இப்போது வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதால் அடுத்த இரண்டு நாள்களுக்குத் தொடர்ந்து மழைபெய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கட

(08 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சித்திரவதைக் கொடுமை இலங்கையில் சர்வ சாதாரணமாகிவிட்டது

### ஐ.நா. விசேட இணைப்பாளர் சாடுகிறார்

ஜெனிவா,ஒக்.30

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் மிகப்பெரிய அளவில் கொடூரங்களை, சித்திரவதைகளைப் புரிந்துவருகின்றனர். அங்கு அவை சர்வசாதாரணமாகி - வழமையாகி - வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு இலங்கை அரசு உடனடியாகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை கவுன்ஸிலின் சித்திரவதைகள் கண்காணிப்புக்கான விசேட இணைப்பாளர் மாண்பிறெட் நொவாக் நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

விசேட இணைப்பாளர் மாண்பிறெட் இம்மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் இலங்கையில் ஒருவாரகாலம் தங்கியிருந்து அங்கு நடைபெறும் சித்திரவதைகள் குறித்த முறைப்பாடுகளை விசாரித்து ஆராய்ந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில், இலங்கைப் பாதுகாப்புப் படைகள் கொடூரமான சித்திரவதைகளில் ஈடுபடுகின்றார்கள் என்று அவர் தமது அறிக்கையில் சாடியுள்ளார்.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் சில வருமாறு:-

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் மற்றும் உத்தியோக பூர்வ அமைப்புகளுக்கும் கிடைத்த சித்திரவதைக் கொடுமைகள் பற்றிய முறைப்பாடுகளை அவதானித்தால், இலங்கையில், தடுப்பாரின்றி மிகத் தாராளமாகச் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது தெளிவாகப் புலனாகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் கிபிர் குண்டுவீச்சு!

கிளிநொச்சி, ஒக். 30

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதி மீது விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுகளை நடத்தியுள்ளன.

நேற்று முற்பகல் சுமார் 10 மணியளவில் விமானப்படையின் இரு கிபிர் விமானங்கள் அங்கு மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதன்போது யோகராசா (வயது - 42), சாந்தகுமாரி (வயது - 42) ஆகிய இரு பொது மக்கள் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்புகள் மற்றும் பயன்தரும் மரங்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் அச்சுறுத்தலால் சரண் அடைந்த ஆசிரியை கிளிநொச்சி செல்ல பயண ஏற்பாட்டுக்கு உத்தரவு

### யாழ். நீதிமன்றம் பலாலிப் படைத் தளபதிக்கு விடுத்தது

யாழ்ப்பாணம்,ஒக்.30

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். நீதிமன்றத்தில் சரணடைந்த மந்துவில் பாரதி வித்தியாசாலை ஆசிரியைக்கு கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட ஆசிரியை தமது இரு பிள்ளைகள் மற்றும் தாயாருடன் கிளிநொச்சிக்குச் செல்வதற்கான பயண ஒழுங்குகளைச் செய்து கொடுக்குமாறு யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு யாழ். நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மந்துவில் பாரதி வித்தியாலயத்தின் ஆசிரியை ஒருவர் தமது இரு பிள்ளைகளுடன் யாழ். நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். அவர் அரச இல்லமான கானான் சிறுவர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

தமது கணவன் கிளிநொச்சியில் உள்ளார் என்றும் அவருடன் சேர்ந்து கொள்வதற்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுமாறு ஆசிரியை யாழ். நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஆராய்ந்த யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா பிரஸ்தாப ஆசி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு நேரத்தில் வீட்டில் கட்டிவைக்கப்பட்டு டெனிஷ் நிறுவனப் பணியாளர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஒக்.30

நாரந்தனை வடக்கில் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்த இளை ஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் அவரது வீட்டில் கட்டிவைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நாரந்தனை வடக்கு, தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தடியைச் சேர்ந்த சண்முகநாதன் பகீரதநாதன் (வயது 28) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

அப்போது சாட்சியமளித்த கொலையுண்டவரின் தந்தை எஸ். சண்முகநாதன் (வயது 75) தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் இரவு நானும் மகனும் வீட்டில் இருந்தோம். இரண்டு மூன்று பேர்கள் வீட்டுக்கு வருவதை அவதானித்தேன். கண் பார்வை மங்கியுள்ளதால் அவர்களை அடையாளம் காணமுடியவில்லை.வந்தவர்கள் எனது கைக

(08 ஆம் பக்கம் பார்க்க)



கரும்புலிகளின் சடலங்களை நிர்வாணமாக்கி, மக்கள் பார்வைக்கு அவற்றை வைத்தமையை ஆட்சேபித்து கோவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத் தொண்டர்கள் கைதான போது...... (செய்தி 8 ஆம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் 45 பிரதிநிதிகளுக்கு விஸா அனுமதி ரத்து!

## புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டார்களாம்

கொழும்பு, ஒக். 30

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கி இலங்கை யின் ஒருமைப்பாட்டுக்குச் சவாலா கச் செயற்பட்டவர்கள் என்று கருதப்படும்- பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் உட்பட ஆறு நாடுகளைச் சேர்ந்த - ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆறின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சுமார் 45 பேருக்கான விசா அனுமதிப் பத்திரங்கள் ஏற்கனவே இரத்துச்செய்யப் பட்டுள்ளன என்று தெரிவிக் கப்படுகின்றது.

அரச சார்பற்றநிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற் கான நாடாளு மன்றத் தெரிவுக் குழுவினால் கண்டறியப் பட்ட விவரங்களையடுத்து, பாதுகாப்பு அமைச்சினால் இந்த வெளி நாட்டவர்களது விசா அனுமதிப்பத்திரங் கள் இரத்துச் செய்யப்பட்டன என்றும் கூறப்படுகின் றது.

இவற்றில் ஒரு நிறுவனம் கஞ்சிகுடிச்சாறில் விடுதலைப் புலிகளின் வைத்தியசாலையை அமைப் பதற்கு நிதி வழங்கியுள்ள தாகவும் தகவல் வெளிவந்துள்ள தாம். கிழக்குமாகாணம் அரச படை யினரால்கைப்பற்றப் பட்ட போது இந்த வைத்தியசாலையும் பாது காப்புப் படையினரால் கண்டுபிடிக் கப்பட்டது என்றும் கூறப்ப டுகின்றது.

பிரான்ஸின் இன்னொரு அரச சார்பற்ற நிறுவனம் திருகோண மலைப் பிரதேசத்துக்குச் சென்று விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் சுகாதார அமைச்சின் சின்னத்துடன் பதாகையொன்றைக் காட்சிக்கு வைத்து மருத்துவ நிலையம் நடத்தியுள்ள தாகவும் அந்தப் பதாகைகளின் இடப்பக்கத்தில் விடுதலைப் புலிகளின் சுகாதாரத் திணைக்களம் எனவும் வலப்பக்கத்தில் சுகாதார அமைச்சு எனவும் குறிப்பிட்டு அதன் மத்தியில் அந்நிறுவனத்தின் பெயரும் குறிப் பிடப்பட்டிருந்தது என்றும் கூறப் படுகிறது.

இவ்விடயங்களை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னால் அந்த அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர் என்றும், விட்ட தவ றுக்காக அவர்கள் மன்னிப்பும் கோரினர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் விசாரணைக்கு அழைப்பு*

அண்மைக்காலம்வரை இலங்கையின் நோர்வேத் தூதுவராகக் கடமையாற்றிய ஜோன் வெஸ்ட் போர்க்கும், இங்கு தூது வராக நியமனம் பெற்று வருவதற்கு முன்னர் இந்நாட்டில் செயற்பட்ட அரச சார் பற்ற நிறுவனமொன்றின் வதிவிடப்பணிப்பாளராக இலங்கையில் பணிபுரிந்தமையும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குத் தெரியவந்துள்ளதாம்.

ஒருசில அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதி காரிகளாகச் செயற்படுபவர்கள் யாரென்பது அதன் கீழ் மட்ட அதிகாரிகளுக்குக்கூடத் தெரியா திருப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

எதிர்காலத்தில் மேலும் பல அரச சார்பற்ற நிறுவனங் களைத்தங்களைச் சந்திக்குமாறு தாங்கள் அழைக்க வுள்ளனர் எனவும் -

எதிர்வரும் 12 ஆம் திகதி சமுகம் தருமாறு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் அழைக் கப் பட்டுள்ளது எனவும்-

மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

(சி)

# 21 கரும்புலிகளுக்கு நோர்வேயில் அஞ்சலி

கொழும்பு, ஒக்.30

அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீது கடந்த 22 ஆம் திகதி தாக்குதல் நடத்தி மரணித்த 21 கரும்புலி உறுப்பினர்களுக்கு அஞ்சலிசெலுத்தும் நிகழ்வொன்று கடந்த வெள்ளிக்கிழமை நோர்வே யில் இடம் பெற்றுள்ளது.

நோர்வே நாட்டின் தலை நகரான ஒஸ்லோவில் நடை பெற்ற இந்த நிகழ்வை நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது. அதன் பிரதான அலுவலகத்தில் நடை பெற்ற நிகழ்வில் 21 கரும்புலி உறுப்பினர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு சுடர், மலர் வணக்கங்கள் செலுத்தப் பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து நோர்வேயில் வசிக்கும் ஆயிரக்கணக் கானோர் கலந்து கொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர் எனக் கூறப்படுகின்றது. (சி)

# சரசாலையில் நாளை கதைகூறல் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.30

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி சரசாலை பொது நூலக ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் போட்டிகளில் கதைகூறல் போட்டி நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி கடந்த சனிக் கிழமை நடத்தப் படவிருந்து பிற்போடப்பட்டிருந்தது என நூலகத்தின் நூலகர் தெரிவித்தார்.

# வரவு-செலவுத் திட்டம் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு விரைவில்

கொழும்பு, ஒக். 30

அரசால் அடுத்த வாரம் நாடாளுமன்றிற்குச் சமர்ப்பிக் கப்பட வுள்ள 2008ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது தொடர்பில் ஜே.வி.பி. அடுத்த வார இறுதியில் தீர்மானமெடுக்கவுள்ளது.

ஜே.வி.பி. அனேகமாக வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கும் தீர்மானத்தையே மேற்கொள்ளும் என்று அக்கட்சி வட்டா ரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி வரவு-செலவுத் திட்டம் நாடாளு மன்றில் சமர்ப்பிக் கப்படுகிறது. அதன் பின்னர் ஒரு சில நாள்கள் கழித்து, ஜே.வி.பி. இது தொடர்பான தனது தீர்மானத்தை மேற் கொள்ளும். எடுக்கப்படும் தீர்மானம் அரசை அன்றி மக்களையும், நாட்டையும் பாதுகாக்கும் வகையில் அமையும் என்று அக்கட்சி தெரிவிக் கின்றது.

இது தொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸ்ஸ நாயக்க கூறியவை வருமாறு:-

புதிய வரவு-செலவுத் திட்டத் தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக் கும் பயன்தரும் விடயம் எதுவும் இருப் பதாகத் தகவல் இல்லை.

தற்போது அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினத்தைக் குறைப்பதற்கான எந்தத் திட்டமும் அதில் இல்லை. மக்கள் மீது மேலும் மேலும் சுமையை ஏற்றுவதாகவே இந்த வரவு- செலவுத் திட்டமும் அமையப் போகிறது.

இந்த உத்தேச வரவு- செலவுத் திட்டத்தை ஆதரிப்பதால் மக்கள் எந்த நன்மையும் அடையமாட்டார்கள்.

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக் கப்பட்டு ஓரிரு நாள்களில் இது தொடர்பான எமது நிலைப்பாடு வெளிப் படுத்தப்படும் - என்றார். (சி)


## கண்ணீர் அஞ்சலி



**தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக்கிளையில் கடமையாற்றிய**
திருமதி இ.அருந்ததி அவர்களின்
அன்புத் தந்தை
**சுந்தரம் சங்கரலிங்கம்**

*அவர்களது மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

NSB முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசியசேமிப்பு வங்கி.



## மரண அறிவித்தல்கள்

### பண்டாரி மார்க்கண்டு

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி மார்க்கண்டு நேற்று (29.10.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி-குழந்தை அம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான வட்டப்பா-குழந்தை அம்மா தம்பதியரின் மருமகனும் தேவியின் அன்புக் கணவரும் சிறீஸ்வரி (ஆசிரியை, முல்/ மல்லாவி மத்திய கல்லூரி), சிவனேஸ்வரி, சற்குனேஸ்வரி (ஆசிரியை, கைதடி குருசாமி வித்.), சதீஸ்வரி (நெதர்லாந்து), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), மதீஸ்வரி ஆகியோரின் தந்தையும், புஸ்பராசா, சவுந்தராஜா, தபேந்திரன் (சமூகசேவைகள் அலுவலர் - கோப்பாய்), தினேஸ்குமார் (உரிமையாளர், சிடி கார்டின், கொழும்பு) ஆகியோரின் மாமனும் செல்லம்மா, காலஞ்சென்ற ரத்தினம், தேவி, வேலையா, வீரசிங்கம், லிங்கம், ரத்தினசிங்கம், குலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் இன்று (30.10.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி ஊத்தல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.தபேந்திரன்
(மருமகன்).

கைதடி வடக்கு,
கைதடி.

### சீவரத்தினம் வடிவாம்பிகை

*(பத்தாயிரம்)*

கந்தரோடை வீதி, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் வடிவாம்பிகை நேற்று (29.10.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கதிரவேலு சீவரத்தினத் தின் மனைவியும், ஜெயக்குமார் (கொழும்பு), ஜெயநந்தினி (சங்கானை) ஆகியோரின் தாயும், பாலசுப்பிரமணியம், (பிள்ளையார் ரான்ஸ்போர்ட், சங்கானை), பரமேஸ்வரி (சாந்தி) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் இன்று (30.10.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
(மருமகன்).

கந்தரோடை வீதி,
சுன்னாகம்.



## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வஜித் வருடம் ஐப்பசித் திங்கள் 14ஆம் நாள் நாளை (31-10-2007) புதன்கிழமை ஷஷ்டி திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய முற்பகல் 10.15 மணி முதல் 11.30 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்தத்தில்

காரைநகர் சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும், மட்டுவில் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகளின் தௌஹித்திரனும், பிரம்மஸ்ரீ வாமதேவ சர்மா தம்பதிகளின் புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**பிரபாகர சர்மாவிற்கு**

மாவை ஆதீனம் சிவஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் தம்பதிகளின் பௌத்திரியும், கீரிமலை சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தம்பதிகளின் தௌஹித்திரியும், பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா தம்பதிகளின் புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**கிரிஜாவை**

கன்னிகாதான, திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்யக் கந்தரோடை வற்றாக்கை விசாலாக்ஷிசமேத விஸ்வநாதப் பெருமான், மட்டுவில் வேம்படிக் கந்தன் திருவருளுடனும், மாவைக்கந்தன், கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் அனுக்கிரகத்துடனும், பெரியோர்கள் நல்லாசியுடனும் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணமண்டபம் : ஐங்கரன் திருமண மண்டபம், 105, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
சமாவர்த்தனம்: மேற்படி மண்டபத்தில் காலை 6 மணிக்கு நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

**திருமதி வாமதேவ சர்மா**
"SPENCER VILLA",
07, 2/4, COLLINGWOOD PLACE,
WELLAWATTA.
TEL: 0112360921,
077 3993948

**திரு.திருமதி து.குமாரசாமி சர்மா**
இளவாலை வடக்கு,
இளவாலை.
தொ.பே.:- 060 2212440

(இருவீட்டார் அழைப்பு) (67420)



## தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

செலான் வங்கி

செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் 30.06.2006 வரையான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்டு மீளப் பெறப்படாத நகைகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன

| திகதி | ஏலம் இடம்பெறும் வங்கிக் கிளை | நேரம் | அடகு ஏற்கப்பட்ட வங்கிக் கிளை |
|---|---|---|---|
| 03.11.2007 | யாழ்ப்பாணம் | காலை 10 மணி | யாழ்ப்பாணம் |

**செலான் வங்கியானது தனது தனிப்பட்ட கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகளில் அடகு வைக் கப்பட்ட நகைகளை ஏலத்தில் விடும் உரிமையைக் கொண்டது. அத்துடன் முன் அறிவித்தலின்றி ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமையும் உடையது.**

உதவிப் பொது முகாமையாளர் பகுதி III
வரையறுக்கப்பட்ட செலான் வங்கி,
7 வது தளம் செலான் தலைமைக் காரியாலயம்,
இல.90, காலி வீதி, கொழும்பு - 03
தொலைபேசி இல.011-4701727, 011-2456727
(சி/54163)



### வேலைக்கு ஆள் தேவை

வீடியோ கடைக்கு வேலை ஆள் தேவை. முன் அனு பவம் உள்ள பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது. சம்பள விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- ஹரி வீடியோ சென்ரர்.
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (67416)

### கோழி தேவை

புறொயிலர், ஊர்ச்சேவல்கள் என்பன நியாயமான விலைகளில் கொள்வனவு செய்யப்படும். உடன் தேவை.
தொடர்பு:- மலரீ பாம் சென்ரர்.
61, இராமநாதன் வீதி, கலட்டி யாழ்ப்பாணம். (67417)

### தவறிவிட்டது

திருமதி ஞானலட்சுமி சுவாமிநாதபிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (368110051V) தட்டாதெருச் சந்திக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடை யில் தவறிவிட்டது. இத னைக் கண்டெடுத்தவர்கள் ஞா.சுவாமிநாத பிள்ளை, அழகொல்லை பிள்ளையார் கோயி லடி, அளவெட்டி என்னும் முகவரியில் ஒப் படைத்துதவவும். (67415)

### வீடு வாடகைக்குண்டு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு ரெலி போன் உட்பட வைமன் றோட்டில் வாட கைக்குண்டு.
தொடர்பு:
N. ஸ்ரீ ரங்கநாதன்,
14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No.222 8533 (சி/54166)

### காசாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள காசாளர் தேவை. வயதெல்லை 40 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
உடன் தொடர்பு கொள்ளவும்.
36, ... வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0716357267 (67413)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய விவசாயிகளின் பிள்ளைகள் 100 பேருக்கு 20,000 ரூபா வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படும்

## பொன்விழாவையொட்டி கமநலத் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.30

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் சேமிக்கப்பட்ட நிதியிலிருந்து வறிய விவசாயிகளின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

100 பிள்ளைகளுக்குத் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அவர்களின் கல்வித் தேவைக்கென இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. புலமைப் பரிசில் பெறுவதற்கான தகமைகளை யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

* பெற்றோர் முழுநேர விவசாயிகளாகவும் ஏதாவது ஒரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும்.
* சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
* புலமைப் பரிசில் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரணப் பரீட்சையில் சித்தியெய்தி 2009 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவனாக அல்லது மாணவியாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய தகைமையையுடைய விண்ணப்பதாரிகள் தத்தமது கமக்கார அமைப்பின் சிபாரிசுடன் உரிய கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தரிடம் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைக் கையளிக்குமாறும் விண்ணப்பத்துடன் தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபாரிசுக் க்டிதமும், கிராம சேவையாளரின் சிபாரிசுக் கடிதமும் அடங்கியிருக்க வேண்டுமெனவும் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெரும்பாக உத்தியோகத்தரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## தீவக முன்பள்ளி ஆசிரியர்களை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.30

தீவகப் பகுதியில் மகளிர் சுயதொழில் முயற்சி மேம்பாட்டு வலையமைப்பு மூலம் முன்பள்ளி ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

யாழ். வர்த்தக தொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றிய பணிப்பாளர் எஸ்.ஜே. செல்வராஜா இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

முன்பள்ளி ஆசிரியரூடாக முன்பள்ளியை மையப்படுத்தி மகளிர் தொழில் மேம்பாட்டை கிராமிய ரீதியில் முன்னெடுப்பதனை நோக்கமாக கொண்டே இச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. (203-95)

## கோப்பாய் கோட்ட கல்வி அதிகாரி நியமனம்

அச்சுவேலி,ஒக்.30

கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கல்வி அதிகாரியாக இடைக்காடு மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றிய வி.எஸ். சித்திரவடிவேல் பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த இவர் நாளை மறுதினம் அந்தப் பதவியைப் பொறுப்பினை ஏற்கவுள்ளார். (202-11)

# மிருசுவில் சேமக்காலையில் சடலங்களை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.30

மிருசுவில் கத்தோலிக்க, கிறிஸ்தவ சேமக்காலையில் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. இதனால் பத்து கிலோமீற்றர் தூரம் வரை சென்றே சடலங்களை அடக்கம் செய்ய வேண்டியுள்ளது. அங்கு சடலங்களை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தென்மராட்சி கிழக்கு பிரதேச மக்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு பிரதேச மக்கள் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயம், தவசிக்குளம் காணிக்கை மாதா ஆலயம், உசன் கிறிஸ்தவ தேவாலயம் ஆகிய பங்குகளைச் சேர்ந்த மக்களின் சேமக்காலை மிருசுவில் கண்டி வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயம் எனக் காரணம் காட்டி மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கண்டிவீதி மிருசுவிலில் இருந்து கொடிகாமம் வரை பொதுமக்களின் வாகனங்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்ட நிலையில், தோள் சுமையில் உட்பாதையூடாக சடலங்களை கச்சாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பிரச்சினையுடன் பல இடர்களின் நடுவே வசிக்கும் இப்பகுதி மக்களின் பரிதாப நிலையை கருணையுடன் பரிசீலினை செய்து சடலங்களை மிருசுவில் சேமக்காலையில் அடக்கம் செய்ய ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது. (202-207)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கண்காட்சி சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம்,ஒக்.30

எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கண்காட்சி நடைபெற உள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. (அ-207)

# திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.30

திருமறைக் கலாமன்றம் பாடசாலை மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் தென் மோடி நாட்டுக்கூத்துப் போட்டியை நடத்தவுள்ளது.

மன்றம் அடுத்த மாதம் நடத்தவுள்ள நாட்டுக் கூத்து விழாவின் ஓர் அங்கமாகவும் கூத்துக் கலையை பேணும் நடவடிக்கையாகவும் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

திறந்த போட்டியில் ஒரு மணித்தியாலமாகவும் பாடசாலை மட்டப் போட்டியில் 30 நிமிடமாகவும் நாட்டுக் கூத்துக்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

பாரம்பரியமான நாட்டுக்கூத்து ஆற்றுகைகளுடன் மரபுவழிக் கூத்தின் கட்டமைப்புக்குள் படைக்கப்பபட்ட புதிய கூத்து ஆற்றுகைகளும் போட்டியில் இடம்பெறலாம்.

அடுத்த மாத இறுதியில் நடத்தப்படவுள்ள இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பிரதி இயக்குனர், திருமறைக் கலாமன்றம், 238, பிரதானவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202)

## கல்வி அதிகாரிகளுக்கு இரண்டு நாள் செயலமர்வு

அல்வாய்,ஒக்.30

யாழ்.மாவட்டத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோருக்கான நியமதர உள்ளீட்டு முகாமைத்துவ பயிற்சிச் செயலமர்வு இரண்டு தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளதென யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (202)

# அடையாள அட்டை விண்ணப்பப்படிவம்: பலாலி பாதுகாப்புத் தலைமையகம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.30

விஷேட அடையாள அட்டை பெறுதல் தொடர்பாக மானிப்பாயைச் சேர்ந்த சி.அரசரத்தினம் என்பவர் 'உதயன்' வாசகர் திருமுகம் பகுதியில் கடந்த 27 அம் திகதி எழுதியிருந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பாக பாதுகாப்புப் படைத் தரப்பிலிருந்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

அரசரத்தினம் என்பவர் தனது கடிதத்தில் விஷேட அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்குரிய விண்ணப்பப் படிவங்களை படைத்தரப்போ கிராமசேவையாளரோ இதுவரை வழங்கவில்லை என்று குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் அவற்றை சில கடைகளில் பணம் கொடுத்து பெற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டு சம்பந்தமாக படைத் தலைமையகம் மேற்கொண்ட விசாரணைகளின் போது, அனைத்து கிராம சேவை அதிகாரிகளும் தமக்குரிய பிரிவுகளில் உள்ளோருக்கு பாதுகாப்புப் படையினரால் இலவசமாக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முறைப்படி விநியோகித்ததாக உறுதிப்படுத்தினர்.

என்றாலும் சம்பந்தப்பட்டவர் குறிப்பிடும்படி கடைகளில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள தேவை ஏற்பட்டில்லாததுடன் இதுவரை பாதுகாப்புத் தரப்பினராலோ அல்லது கிராம சேவை அதிகாரிகள் மூலமாகவோ விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் இருப்பதாக அறியவரவில்லை. அத்துடன் படிவங்கள் பாதுகாப்புப் படையினரால் இலவசமாக வழங்கப்படுவதாகவும் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டாமென்றும் வானொலி மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் பொது மக்களை அறிவுறுத்தியிருந்தோம்.

அவ்வாறிருந்தும் சம்பந்தப்பட்டவர் மேற்படி ஆலோசனைகளைப் பின்பற்றாது செயற்பட்டதன் விளைவாக அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றார் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இவ்வாறு யாழ்.கட்டளை அதிகாரிக்குப் பதிலாகப் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஊடகத்துறை அதிகாரி மேஜர் தர்ஜூ அனுப்பியுள்ள விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# கோவிலாக்கண்டி கிராமத்தின் அபிவிருத்திப் பணிகள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் ஆரம்பிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஒக்.30

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென 'போரூட்' நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்து ஒரு வருடமாகியும் வேலைத்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம், சிறுவர் பூங்கா, ஆகியவை நிர்மாணிக்கவும் ஸ்ரீமுருகன் வீதியைப் புனரமைப்புக்கெனவும் போரூட் நிறுவனத்தினர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாதது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இத் திட்டங்களை மேற்கொள்ள நிக்கொட் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (202-207)



தென்னிந்திய திருச்சபையின் 60 ஆவது ஆண்டு வைரவிழாவையொட்டி ஆதீனத்தின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல்லை பேராயர் அருட்திரு கலாநிதி டானியல் செல்வராசா தியாகராசா, சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபரும் யாழ்.மறைமாவட்ட [illegible] அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் அடிக்கற்கள் [illegible] லாம். படங்கள்: நேசன்.

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.30

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை உதவி நூலகர், நூலக உதவியாளர் தரம் III ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

உதவி நூலகர் பதவிக்கு முதலாம் அல்லது இரண்டாம் தர (உயர்மட்ட) விசேட பட்டம் அல்லது இரண்டாம் தர (கீழ் மட்ட) விசேட பட்டம் அல்லது இரண்டாம் தர (உயர் மட்ட) சாதாரண பட்டம் அல்லது சாதாரண பட்டத்துடன் நூலக விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

நூலக உதவியாளர் தரம் III பதவிக்கு ஜி.சீ.ஈ சாதாரணதரத்தில் மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் இலங்கை நூலக சங்கத்தின் ஆரம்பப் பரீட்சை அல்லது பல்கலைக்கழகமொன்றில் நூலக விஞ்ஞானத்துடன் கூடிய சான்றிதழ் பரீட்சை பகுதி I அல்லது முழுப்பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பிறப்புச் சான்றிதழ், உயர்கல்வித் தகமைச் சான்றிதழ், தொழிற் தகமைச் சான்றிதழ், அனுபவ- சேவைச் சான்றிதழ் என்பவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் 'பணிப்பாளர் நாயகம், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

***

யாழ்ப்பாணம், ஒக்.30

தீவகக் கல்வி வலயத்தில் நாரந்தனை கணேச வித்தியாலயம், எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் தரத்தில் 2-I இற்கு மேல் தகைமை உடையவர்களும் ஆசிரியர் தரத்தில் 2-II இல் பட்டம் பெற்றவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் வாழ்த்து




இன்று (30.10.2007) ஜேர்மனியில் தனது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடும் சுந்தரலிங்கம் – விஜயகுமாரி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

**விதூர்ஷன்**

சகல கலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, மாமாமார், அத்தைமார், மைத்துனர்மார் மற்றும் உறவுகள்.

"தங்கமுகம்"
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (67408)

## புற்றுநோயாளருக்கு உதவிப்பொருள்கள்

சுழிபுரம், ஒக்.30

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.மேற்கு பிரிவினர் தமது பகுதியில் வாழும் 53 புற்று நோயாளர்களுக்குத் தீபாவளிப் பண்டிகையையொட்டி சில பொருள்களை வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழக் கிழமை யாழ்.வட்டு மத்திய கல்லூரி மண்டபத்தில் வைத்து இப் பொருள்கள் வழங்கப்பட்டன. (202-25)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக தோழர்
**ஜீ.கிளட்வின்**
(நல்லூர் ப.நோ.கூ.சங்க எழுதுவினைஞர்)
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மேரிதிரேசா ஜீவரட்ணம்**

அவர்கள் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.
(67414)

# 31ஆம் நாள் நினைவு தினம்

கோப்பாய் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் **இ.கணேசலிங்கம்** அவர்களின் அன்பு மாமி

**திருமதி தங்கம்மா மயில்வாகனம்**

அவர்களின் 31ஆம் நாள் நினைவுதினம் இன்று (30.10.2007) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருப்பதால் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கிராம அலுவலர்கள்,**
**வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம்.**
(67397)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி திரேசா ஜீவரட்ணம்



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேசா ஜீவரட்ணம் அவர்கள் 29.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜீவரட்ணத்தின் அன்பு மனைவியும் செலின் (இலங்கை வங்கி), ஜறின், மேவின் (ஹொலண்ட்), கொட்வின் (இந்தியா), சாந்தி, கிளட்வின் (நல்லூர் MPCS) ஆகியோரின் அன்புத் தாயும் இக்நேசியஸ் (World Vision), றெஜினோல்ட், ஜீவகுமாரி, ராணி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஹெலன் இராஜசோதி (ராணி), பியற்றிஸ் [illegible] னோகரன் (றூபி), ராஜரட்ணம் (துரை), புளோரன்ஸ் லோ[illegible]ஸ் (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் இன்று (30.10.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் திருப்பலியை அ[illegible] அன்னாரின் பூதவுடல் பெரியவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு வீதி,
பெரியவிளான். (67405)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

## திருமதி தியாகராசா கனகம்மா



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மெமோறியல் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் 29/6, சனல் வீதி, திருமலையில் வசித்து வந்தவருமாகிய திருமதி தி.கனகம்மா 28.10.2007 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் நா.தியாகராசா (முன்னாள் இலிகிதர், மூளாய் வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு துணைவியாரும் சிதம்பரப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மகளும் நாகமுத்து - பார்வதி தம்பதியரின் மருமகளும் அமரர்களான சடாசிவம் (மலேசியா), சோமசுந்தரம் (பொலிஸ் உத்தியோகத்தர்), சின்னையா (கார் புறோக்கர்) மற்றும் மலேசியாவில் வசிக்கும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மல்லிகா (ஜேர்மனி), ஆனந்தன் (ஜேர்மனி), இராகவன் (லண்டன்), Dr.சுதர்மன் (சித்.வைத்தியர் - உப்புவெளி) ஆகியோரின் அன்புத் தாயும் மனோகரன் (ஜேர்மனி), நவம் (ஜேர்மனி), Dr.அருள்மொழி (சித்த வைத்தியர் - கப்பல்த்துறை) ஆகியோரின் அன்பு மாமியும் திருமகள், சேயோன், அனிந்தா, அர்ச்சனா, அனிருத்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இல.29/6, சனல் வீதி, திருமலையில் நாளை (31.10.2007) புதன்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.ஆனந்தராஜா**
(அதிபர் - உரும்பிராய்).

T.P.: 0777774600,
0602215033 (67399)

# கணித வகுப்புகள்

தரம் 9 - 11 வரையிலான மாணவர்களுக்கு கணித வகுப்புகள் நடைபெறுகின்றன.
*பிரத்தியேக வகுப்புகளும் நடத்தப்படும்.

தொடர்பு:
இல.126, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.077 6099215,222 6047 (67410)

# கண்டெடுக்கப்பட்டுள்ளது

28.10.2007 அன்று சிங்கள மகாவித்தியாலயத்தின் முன்பாக ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

வினோஜிதா தொலைத்தொடர்பு நிலையம்
கோண்டாவில் - 5809
(அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாக) (67407)

# கண்டெடுக்கப்பட்டுள்ளது

சண்முகநாதன் தினேஸ்கரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (810060948V) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்பு: **ராஜா பிளாசா,**
74, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (67404)

# விசேட மலிவு விற்பனை

தரம் - 7, தரம் - 11 மாணவர்களுக்கான பாடப் பயிற்சி நூல்கள் 50 % கழிவில் விற்பனை செய்யப்படுகின்றன.

இருப்பு உள்ளவரை மட்டுமே.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
No.234, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

# இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது. 1கிலோ 550/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:- **விஜயகுமார்,** குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. (67385)

# கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRAHA புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.**

- றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
- கோல்டன் பாம் - பருத்தித்துறை.
- P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

T.P.No:- **222 3529,**
**222 2867** (67384)

## புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)

புலோலி கிழக்கு, பருத்தித்துறை

### மின் பிறப்பாக்கி விற்பனைக்கான கேள்வி கோரல்

சங்கம் சிறிது காலம் பாவனையில் ஈடுபடுத்திய நல்லதரத்திலுள்ள பெற்றோலில் இயங்கும் 5-K.V.A SH 7000 DX (ELE MAX) ரக GX 390 கொண்டா 13.0 இயந்திரம் இணைக்கப்பட்ட மின் பிறப்பாக்கி விற்பனைக்குண்டு. பெற்றுக் கொள்ள விரும்புவோர் 05.11.2007 இற்கு முன்னர் கேள்விக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

*காரியாலய நேரங்களில் மின்பிறப்பாக்கியைப் பார்வையிடலாம்.*

**பொதுமுகாமையாளர்,**
புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி/54136)

### திருத்தி வாசிக்கவும்

கடந்த 29.10.2007 ஆம் திகதியன்று உதயனில் 4ஆம் பக்கத்தில் பிரசுரமான மரண அறிவித்தலில் நாகேந்திரர் அரிகரத்தினராசா (ஓய்வுபெற்ற அதிபர்) மேற்படி விளம்பரத்தின் இரண்டாம் பந்தியில் "அன்னார் நெடுந்தீவு கிராமசபை முன்னாள் தலைவர் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் என்றிருப்பது தவறாகும். அதனை அன்னார் காலஞ்சென்ற அமிர்தம் மற்றும் அன்னலட்[illegible] [illegible] திருத்தி வாசிக்கவும்.

# அரசாங்க பெறுகை அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

### இரும்பு இறாக்கை (Iron Shelves) வழங்கல்

மேற்படி விடயமாக தகுதிவாய்ந்த பெறுகைதாரரிடமிருந்து பெறுகைகள் கோரப்படுகின்றன. 12.11.2007 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிவரை பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம். (சி/54162)

பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ST.PATRICK'S COLLEGE, JAFFNA

**Commerce Day & Release of "Theral IV"**

**Date** : 30.10.2007 Tuesday at 9.30 a.m.

**Venue** : Mathews Hall, St.Partrick's College, Jaffna.

**Chief Guest:** Prof.V.P.Sivanathan,
*Head, Dept. of Economics,*
*Faculty of Arts,*
*University of Jaffna.*

**All are cordially invited**

Commerce Students' Union,
St.Patrick's College, Jaffna.
(C/54158)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த

**திருச்செல்வம் சங்கவி**

2007இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதோடு இவருக்கு கல்வி கற்பித்த அதிபர் உட்பட அனைத்து ஆசிரிய உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்:
**தி.சுதர்ஷன்** (அண்ணா).
(67401)

# Danish Demining Group

## முதலுதவியாளர் தேவை (Paramedic)

மேற்படி பதவிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

*எதிர்பார்க்கப்படும் தகுதிகள்:-*


- க.பொ.த உயர்தரம் (விஞ்ஞானப் பிரிவு விரும்பத்தக்கது)
- வயதெல்லை:- 20-30 வரை

*விண்ணப்ப முடிவு திகதி:- 07.11.2007*

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-*

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு,
18/10, வைமன் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (67898)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிமுத்து சோமசுந்தரம்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 29 |
| 04 | 10 |
| 1942 | 1999 |

**திதி:- 30.10.2007**

எட்டாண்டு சென்றாலும் ஏக்கம் தீரவில்லை
கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை உம் உருவம்
அழியாத கோலமாய் என் உள்ளமதில் வாழ்பவரே.
என் ஜீவன் உள்ளவரை அழியாது உம் நினைவு

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (67408)

தங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைக் கோட்ட உதைபந்தாட்டம் சென். அன்ரனிஸ் 3 பிரிவுகளிலும் சம்பியன்

வலி. வடக்கு, ஒக்.30

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலைகளின்14, 16, 18 வயதுப் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் சம்பியனாகியுள்ளது.

பாடசாலை அணிகளுக்கு இடையேயான இறுதி ஆட்டங்கள் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும் தம்பாட்டி அரசினர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் மிகவும் உற்சாகமாக விளையாடின. இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அன்ரனிஸ் கல்லூரி தனக்கு கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட முடிவில் சென்.அன்ரனிஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் தம்பசிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

16 வயதுப் பிரிவில் சென்.அன்ரனிஸ் கல்லூரியும் கரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் சென். அன்ரனிஸ் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யபட்டது.

18 வயதுப் பிரிவில் சென். அன்ரனிஸ் கல்லூரியும் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன. போட்டி தொடக்கத்தில் சற்று விறுவிறுப்பாகக் காணப்பட்ட போதிலும் சில நிமிடங்களில் இந்த நிலமையில் மாற்றம்

## விளையாட்டு அரங்குகளில்

காணப்பட்டது.

சென். அன்ரனிஸ் முதல்பாதி ஆட்டத்தில் 2 கோல்களையும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் 2 கோல்களுமாக 4 கோல்களைப் பெற்று கலாநிதி ஆ.தியாகராசா மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(50-86)

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட்: மகாஜனக் கல்லூரி அணி வெற்றி

வலி.வடக்கு, ஒக்.30

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கென நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 30.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. யாழ். இந்துக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய சஜீவன், ஸ்ரீ விந்துஜன் முறையே 32,13 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜந்தன் 8 ஓவர்களில் 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிரதீப் 8 ஓவர்களில் ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மற்றும் ஜனதன், திலக்சன், பிரசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி 40 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.மகாஜனக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய பிரசாத் 26, திலக்சன் 18, மோசிகீரன் 21 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய பிரவீன், சாரங்கன் தலா 2 விக்கெட்டுகளையும் ஜஸ்மினன், மதுசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 30.2 ஓவர்களில் 9 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

யாழ்.இந்துக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய காங்கேயன் 29, சஜீவன் 20 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜந்தன் 8 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுக்களையும் பிரதீப் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ஜனதன், திலக்சன், பிரசாந் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-56)

# இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒகச்.30

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

* யாழ்.இந்துக்கல்லூரி எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.
* யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
* கொக்குவில் இந்துகல்லூரி எதிர் அரியாலை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்

### 18 வயதுப் பிரிவு

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (50-86)

# ஹொக்கி ஆட்டத்தில் கிறாஸ் கொப்பேர்ஸ் சம்பியன்

வலி. வடக்கு.ஒக்.30

அமரர் ஆனந்தரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்திய கொக்கிச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் யாழ். ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாகக் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த வசந்தரூபனும், தொடர் ஆட்ட நாயகனாக அதே கழகத்தைச் சேர்ந்த ஜெயந்தனும் தெரிவு செய்யப்பட்டார்கள். (186)



புலோலி கந்த முருகேசனார் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளியின் விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விளையாட்டு விழாவில் சனசமூக நிலையத்தின் தலைவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரியுமான எஸ்.சிவராஜசிங்கம் தலைமையுரையாற்றுவதையும் விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இளைப் பாறிய அதிபர் வி.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (50-218)

# வேலணைப் பிரதேச சபை தலைமை அலுவலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்.ஒக்.30

வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலக திறப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் க. கணேஷ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளர்.

வடமாகாண தலைமைப்பீட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (95)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமே கிழக்குத் தாக்குதல்கள் நடைபெற்றன அதனால் புலிகள் சிறுகாயங்களும் இல்லாமல் தப்பி விட்டனர்

## ஸ்ரீபதி எம்.பி சொல்கிறார்

கொழும்பு,ஒக்.30

கிழக்கில் மாவிலாறு, வாகரைத் தாக்குதல்கள் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டது. அதனால் கிழக்கிலிருந்து புலிகள் சிறு காயங்களும் இன்றித் தப்பிவிட்டனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீ லங்கா சுகந்திரக்கட்சி மக்கள் பிரிவின் இணைச் செயளாலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீபதி சூரியாராய்ச்சி.

கொழும்பு கேம்பிறிச் பிளேசில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்த்தலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழம் உருவாக்கப்படுவதை படையினரே கடந்த 25 வருடங்களாக தடுத்து நிறுத்தியுள்ளனர். எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட சகோதர நிறுவனம் படையினரை தங்களது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு பயன்படுத்தி கொள்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பெண்ணாக இருந்தாலும் 1995 ஆம் ஆண்டு திருகோணமலைக் கப்பல்கள் இரண்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்த யாழ்ப்பாணத்தின் மீதே தாக்குதல்களை நடத்தினார். எனினும் துட்டகைமுனு என்று செல்லிக் கொள்கின்ற மஹிந்த ராஜபக்ஷ சகோதர நிறுவனம் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பிரதேசங்களை விட்டுவிட்டு கிழக்கின் மீதே தாக்குதல்களை மேற்கொண்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே காலித்துறைமுகம் உள்ளிட்ட அனுராதபுரம் விமானப்படைத்தளம் வரை மேற்கொண்ட தாக்குதல்கள் வரை புலிகள் மிக மோசமான பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

புலிகளின் விமானங்களை தாக்கியழிப்பதற்காக மிக் 27 கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கேந்திர நிலையங்களில் சிறு பறவையைக்கூட பறக்க விடமாட்டோம் என்று அரசாங்கம் கூறிய போதும், அநுராதபுரத் தாக்குதலின்போது மிக்-27 விமானத்தின் மூலம் புலிகளின் விமானத்தை ஏன் தாக்கியழிக்க முடியவில்லை.

இந்த தாக்குதலை நடத்துவதற்காக 27 புலிகள் வருகை தந்திருந்ததாகவும் அதில் 7பேர் தாக்குதலை நடத்திவிட்டு தப்பி சென்று விட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

மிக்-27 விமானம் கொள்வனவு செய்யப்பட்டபோது 800 மில்லியன் ரூபாய் ஊழல் மோசடி இடம்பெற்றிருப்பதாகவும் கொள்வனவு செய்யப்பட்ட விமானம் பயன்படுத்தக்கூடிய தரத்தில் இல்லை என்று சுட்டிக்காட்டி நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நிறுவுமாறு கோரிக்கை விடுத்தோம். எனினும் அதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை. புலிகளின் தாக்குதலினால் தாம் பின்வாங்கவில்லை என்றும் -

8.5 வீதத்தில் பெறப்படுகின்ற 500 மில்லியன் டொலர் கடனில் படையினருக்கு தேவையான விமானங்களை கொள்வனவு செய்வோம் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

விமானப்படையினருக்கு விமானங்களைக் கொள்வனவு செய்வது ராஜபக்ஷ சகோதர நிறுவனத்துக்கே பெரும் சந்தோஷம். புலிகளின் தாக்குதல் மூலமாக கடற்படை, விமானப் படையினரின் உளவு பார்க்கும் நடவடிக்கைகள் முழுமையாகத் தடைப்பட்டுள்ளன- என்றார். (சி)

# ஆஸ்துமா நோய்க்குச் சிகிச்சை பெறுங்கள்...

புள்ளி விபரங்களின் படி 2002 ஆம் ஆண்டு இலங்கையில் ஆஸ்துமா நோய்த் தாக்கம் காரணமாக 180, 000 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வருடம் ஆஸ்துமா நோய்த் தாக்கத்தின் காரணமாக 800 உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்விழப்புகளுக்கு, இந்நோய்பற்றிய போதிய அடிப்படை அறிவின்மையும், தகுந்த முறையான சிகிச்சை முறைகள் பின்பற்றப்பட்டு நோயினை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்காமையும், ஆஸ்துமா தாக்கம் ஏற்படும் நிலைகளை உணர்ந்து தகுந்த சிகிச்சைகளை உரிய வேளைகளில் செய்யாமையுமே முக்கிய காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

**ஆஸ்துமா என்றால் என்ன?**

அழற்சி அல்லது ஒவ்வாத்தன்மை (Allergy) காரணமாகச் சுவாசக் குழாய்கள் அசாதாரணமாகச் சுருங்குவதாற் சுவாசிப்பதற்குக் கஷ்டம் ஏற்படும் தன்மையே ஆஸ்துமா என்பதாகும்.

கிரந்தி, எக்சீமா, தும்மல், மூக்கினால் தொடர்ந்து நீர்வடிதல் உள்ளவர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். இந்நோய்களும் ஒவ்வாமையினால் (Allergy) ஏற்படும் நோய்களாகும்.

**இந்த நோயின் குணம் குறிகள் என்ன?**

1. நெஞ்சு இறுக்கம் அடைந்து மூச்சுவிடக் கஷ்டம்.
2. மூச்சுவிடும் போது சத்தம்(ஒலி) ஏற்படுதல்
3. தொடர்ச்சியான இருமலுடன் கூடியசளி

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் அநேகமாக இரவிலும், அதிகாலை வேளையிலும் கூடுதலாக இருக்கும்.

ஆஸ்துமா பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கும் உங்களுடைய ஆஸ்துமா நோய் பற்றி யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 04.11.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் கலந்துகொள்ளவும்.

சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டுகளும்



2007 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

செல்வன் **நந்தகுமாரன் ரஜீவன்**

அவர்களை இன்றைய 30.10.2007 பிறந்த நாளில் மேலும் கல்வியில் பல சிறப்புகள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, அக்காமார், அண்ணாமார், தங்கைமார், மச்சாள்மார், தம்பி.

193, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(67393)

# நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை

நல்லூர்,ஒக்.30

நாய்களின் அதிகரிப்பைக் குறைக்கும் நோக்கில் ஆண் நாய்களுக்குக் கருத்தடைச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.மாநகர சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து.மகாதேவா தெரிவித்தார்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 12 மணி வரை அரியாலை கலைமகள் வீதி சிகிச்சை நிலையத்திலும்-

எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 12 மணிவரை கொழும்புத்துறை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத்திலும் வைத்து நாய்களுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(202-111)

# பரிசளிப்பு விழா

நவாலி,ஒக்.30

ஆனைக்கோட்டை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் தலைவர் வை.சந்திரராசா தலைமையில் இடம் பெற்றது.

(100)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## குமாரசுவாமி கமலகுமார்

(முன்னாள் கணக்காய்வாளர் - இ.போ.ச; நிதி முகாமையாளர் - வவுனியா மக்கள் போக்குவரத்துச் சேவை)

தோற்றம்
06★10★1938

மறைவு
09★11★2006

திதி - 30.10.2007

அன்று எம்மோடு வாழ்ந்து, மறைந்தீர்கள்
இன்று மறைந்தும், எம்மோடு வாழ்கிறீர்கள்
"நினைவு கூர்தல் என்பது, ஒருவகைச் சந்திப்பேயாம்"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு கனடாவில் இடம்பெறும்.

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறந்தோர், சிறியதாய்மார், உடன்பிறவாச் சகோதர, சகோதரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள்.

K.HARENDRAN,
APT#614,
71,Thorncliff Park Drive,
Eastyork -
Ontario - M 4 HIL 3
Canada.
Phone: 416 391 4231

தகவல்:
கு.உதயகுமார் சகோதரன்.
பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

(67374)

# 25ஆவது திருமண நாள் நல்வாழ்த்து



## இராசமாணிக்கம் இராசநாயகம்
## திருமதி சிவமலர் இராசநாயகம் தம்பதியினரை

அவர்கள் திருமண பந்தத்தில் இணைந்த 25ஆம் ஆண்டில் 30.10.2007 இன்று சகல சௌபாக்கியங்களும் பெற்று இன்றுபோல் என்றும் சீரும் சிறப்போடும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அன்புப் பிள்ளைகள் செல்வன் **பிரசாந்** (சிங்கப்பூர்), செல்வி **சுரேக்கா**, செல்வன் **நிசாந்**.

அமுதசுரபி, கூத்தாடியம் பதி,
அல்வாய் வடக்கு, அல்வாய். (67368)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் ஐப்பசி மாதம் 15ஆம் நாள் (01.11.2007) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11.20 மணி வரையிலான தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**துவாரகன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைசெல்வி
**யசோதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கல்யாண மண்டபத்தில்" திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி வடிவேலு பவளம்,
கட்டுடை,
மானிப்பாய்.

திரு.திருமதி குணசீலன் சந்திராதேவி,
"துவாரகை",
பழைய வீதி, கோப்பாய் தெற்கு.


(சி/54152) (இரு வீட்டார் அழைப்பு)

# ஓராண்டு நினைவில்...

## அமரர் நடராஜா இரவிராஜ்

(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

## எங்குற்றீர் ஐயா...!





அரசியலை மூச்சாக்கி
ஆளுமையைப் பேச்சாக்கி
வருகின்ற துன்பங்களை வலிமையொடு எதிர்நோக்கி
பெருமகனாய் வாழ்ந்த எங்கள் குலக்கொழுந்தே!
ஒருவருடம் ஆயிற்றா உமை இழந்து!

ஆசை மனையாளின் அழுகைக்கு முடிவில்லை
அன்புக் குழந்தைகளின் ஏக்கங்கள் தீருதில்லை
நீசக்கரங்களால் நெரிபட்டு வீழ்ந்ததனை
நினைக்க நினைக்க நெஞ்சமின்னும் ஓயுதில்லை....
பாசம் பொழிந்தீர்; பகலிரவாய் எமை அணைத்தீர்
பேசாமல் எமைவிட்டுப் பிரிந்ததென்ன மாயமையா...?

உடல் வருத்தம் நோக்காது ஊர்நோய்க்கு மருந்து செய்தீர்
அடலேறென எழுந்து ஆர்ப்பரித்தீர்; அவைநடுவே
திடமான தொனியோடு தீந்தமிழை உச்சரித்தீர்
இடமெங்கு சென்றீர்? ஏங்குதையா எம்மனது...!

மறுபிறப்பெடுத்திடின் எம் மனைக்கு வந்திடுக
நறுமணமாக எம்மோடு வாழ்ந்திடுக
ஒருவருடமென்ன உயிருள்ள வரையிங்கு
வரும்வழி பார்த்திருப்போம் கண்ணீர் மலர்சொரிந்து.

ஆத்ம சாந்தியை ஆண்டவன் அருள்வான்.

பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி. (67378)

காமாட்சி வைகுந்தம்

# வட.இ.ச.சபைப் பரீட்சைகள் - 2008

வட.இ.ச.சபையின் 2008ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 01.11.2007 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 10.12.2007. விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது (30/=) மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 30/= பெறுமதியான காசுக்கட்டளையை (மணி ஓடர்) உடன் ரூபா 5.00 பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ, 22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்.
**வட இலங்கைச் சங்கீத சபை,**
**யாழ்.கல்வி அலுவலகம்,**
நல்லூர், யாழ்ப்பாணம்.
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும். (சி/54117)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
08 . 01 . 1977

உதிர்வு
03 . 08 . 2007

அமரர்

## சீவரத்தினம் இரத்தினகுமார்

எங்கு சென்றாய் தம்பி – எம்மைவிட்டு
யார் உன்னை – பிரியச் சொன்னது
எத்தனை நாள்கள் சென்றாலும்
உன் பசுமைமிகு நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு நீங்காது.

எமது தம்பியின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல வழிகளில் அனுதாபம் தெரிவித்து உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (30.10.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அண்ணாவும் பாசமிகு நெஞ்சங்களும்.

தொண்டைமானாறு, தாரைநகர்.
(சி/54117)

# மாணவர்களுக்கு பயிற்சி

நவாலி,ஒக்.30

யுனிசெப், வெண்புறா நிறுவனத்தினர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்களுக்கு 3 நாள் பயிற்சியினையும் கருத்தரங்கினையும் நடத்தியதுடன் சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

(100)

# இந்து ஆலயம் அமைப்பு

சாவகச்சேரி நகர சபை வளாகத்தில் இந்துஆலயம்அமைக்கப்படவுள்ளது.

இந்து ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

நகரசபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோரால் இந்த ஆலயம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# திரும்பவும் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி

*"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாதம் முற்றாக ஒழித்துக் கட்டப்படும்.*

*"புலிகளை விட அதிக மேன்மையான பலத்துடன் நாம் இருக்கிறோம் என்பதை நிரூபித்துக்காட்டி வந்திருக்கிறோம். புலிகளுக்குப் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளோம். அவர்களின் முதுகெலும்பையே முறித்து விட்டோம். வன்னியிலும் அவர்கள் முற்றாகத் தோற்கடிக்கப்படுவார்கள். இந்த நாட்டின் இனப்பிரச்சினையை நாம் எமது அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லமாட்டோம்."*

- இப்படி சூளுரைத்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான இவர், நாட்டின் பாதுகாப்புத்துறை விடயங்களில் ஜனாதிபதிக்கு அடுத்து மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் உள்ளவராக இருக்கின்றார். அதனால் அரசின் போரியல் போக்குக் குறித்து - உத்தி பற்றி - அவர் கூறுகின்ற கருத்துகளை அரசின் நிலைப்பாடாகக் கொள்ள முடியும். அந்த வகையில் இப்போது தேசிய ரீதியில் ஒளிபரப்பான நேரடித் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்த மேற்படி கருத்துக்களை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகக் கொள்வதில் தவறேதும் இல்லை.

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வே கொழும்பு அரசின் ஒரே நிலைப்பாடு என்பது இந்தக் கூற்றின் ஊடாக அம்பலப்படுத்தப்பட்டிருப்பதை சர்வதேசம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுகளில் - அல்லது வாதங்களில் - அல்லது முயற்சிகளில் - சிறுபான்மையினரான தமிழர் தரப்புக்கு உள்ள பேரம் பேசும் வலு விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் மட்டுமே. இறைமையுள்ள - சட்ட ரீதியான - ஓர் அரசு என்று தன்னைப் பிரகடனப் படுத்திக்கொள்ளும் பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கும் மேலாண்மைத் திமிரும் கொண்ட கொழும்பு அரசியல் நிர்வாகத்தின் ஒடுக்கு முறைக்குள் சிக்குப்பட்டு அடிமைப் பட்டுக் கிடக்கும் ஈழத் தமிழரின் பலம், விடுதலைப் புலிகளின் போரியல் வலிமை மட்டுமே.

அந்தப் பலத்தை தகர்த்தெறிவதன் மூலம் தான் விரும்பும் உருப்படியற்ற - அரைகுறையான - யோசனைத் திட்டம் ஒன்றைத் தீர்வு என்ற பெயரில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது திணித்து, பலவந்தமாக அதனை நடைமுறைப்படுத்த வைத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டோம் என அறிவிப்பதே இந்த அரசுத் தலைமையின் உள்ளார்ந்த கபடச் சதித்திட்டமாகும்.

அதாவது, பெரும்பான்மையினரின் அடக்குமுறைப் போக்கால் கிளர்ச்சி பெற்ற தமிழரின் உரிமைக்கான - நீதிக்கான - நியாயத்துக்கான - அரசியல் போராட்டத்தை, அதே அடக்குமுறை கொண்டு ஒடுக்குவதுதான் தீர்வுக்கு வழி என்று காட்ட முனைகிறது கொழும்பு நிர்வாகம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவவழித் தீர்வு சாத்தியமே இல்லை என்றும், விட்டுக்கொடுப்பு மற்றும் தாராளப் போக்கோடு முன்னெடுக்கப்படும் அரசியல் தீர்வே சாத்தியமானது என்றும் அமெரிக்கா தொடங்கி இந்தியா வரை முழு சர்வதேச சமூகமுமே ஒரே குரலில் வற்புறுத்தி வருகையில், இலங்கை அரசு மட்டும் இராணுவ வழித் தீர்வில் உறுதியாகவும் முரட்டுப் பிடிவாதத்துடனும் நிற்கின்றது.

அரசியல் உரிமை கோரி - வாழ்வியல் இருப்புக்கான உரிமையை உறுதிப்படுத்தி, கௌரவமான வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்காக - ஆரம்பத்தில் சுமார் மூன்று தசாப்த காலம் தமிழ் மக்கள் தொடுத்த அமைதி வழிப் போராட்டங்களைக் கவனத்தில் கொள்ளவோ, ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை செவிமடுத்து உள்வாங்கிக்கொள்ளவோ விரும்பாத சிங்கள இனவாத அரசுகளும், அவற்றின் தலைமைகளும் ஈழத் தமிழர்களின் அறவழிப் போராட்டங்களை ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தன. ஈற்றில் அமைதிப் போராட்ட வடிவங்கள் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. தமிழரின் காந்திய நெறிப்பட்ட எழுச்சிப் போராட்டங்கள் இராணுவப் பலத்தால் நசுக்கப்பட்டன.

அந்த அடக்குமுறையின் விளைவாகவே இன்று கொழும்பு 'பயங்கரவாதம்' எனச் சித்திரிக்கின்ற ஆயுத வழியிலான வன்முறைப் போராட்டங்கள் தமிழினத்தின் மத்தியில் இருந்து கிளர்ந்து விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன.

வேறு வழியின்றி ஆயுத வழிப் போராட்டத்துக்குத் தமிழர்களை நெட்டித் தள்ளி, நிரந்தர வன்முறை நிலைமையை இந்தத் தீவில் ஏற்படுத்தியவர்கள் ஆட்சியாளர்களான சிங்களத் தலைவர்களே.

தான் விதைத்த வினையின் விளைவை அறுவடை செய்யும் இன்றைய நிலையில் அதைப் 'பயங்கரவாதம்' என்று சித்திரிக்கின்றது கொழும்பு. என்னே விந்தை இது?

'பயங்கரவாதத்தை ஒழித்து அதன் பின்னர் அரசியல் தீர்வு' என்ற விநோதக் கோட்பாடும் கூட இன்றைய ஆட்சியாளர்களால் புதிதாக முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் காலத்தில் லலித் அத்துலத் முதலியும், ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் ரஞ்சன் விஜேரத்தினாவும், ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் அனுருத்த ரத்வத்தையும் ஏறி விழுந்து காலை முறித்துக் கொண்ட நொண்டிக் குதிரைக் கோட்பாடுதான் இது.

இப்போது, அதே குதிரையில் ஏறி, தமிழர் மீது சவாரி விட முற்பட்டிருக்கின்றார் கோத்தபாய ராஜபக்ஷ.

பெறுபேறை அவரும் மக்களும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# செய்தி ஒலிபரப்புவதற்கு இலங்கையில் எந்த நிறுவனத்துக்கும் அனுமதி இல்லை

## 'சூரியன்' நிறுவன வழக்கில் அரச சட்டத்தரணி

கொழும்பு,ஒக்.30

இலங்கையில் ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உட்பட எந்த நிறுவனத்திற்கும் செய்திஒலிபரப்ப அனுமதி வழங்கப்படவேயில்லை.

இவ்வாறு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார் அரச சட்டத்தரணி நெரின்புள்ளே.

'சூரியன் எவ்.எம்.' உட்பட ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஐந்து சேவைகளின் ஒலிபரப்பு உரிமத்தை அரசு ரத்துச் செய்தமையை ஆட்சேபித்து அந்த நிறுவனம் தாக்கல் செய்திருந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் கவனத்தில் எடுக்கப்பட்ட பின்னர் நவம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதன் தலைவர் நீதியரசர் கே. சிறிபவன், நீதியரசர் ரோஹினி பெரேரா ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

அப்போது அரசு சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி நெரின் புள்ளே மனுவை ஆட்சேபித்து வாதிட்டார்.

"இலங்கையில் ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உட்பட எந்த நிறுவனத்துக்கும் செய்தி ஒலிபரப்ப அனுமதி வழங்கப்படவேயில்லை. இந்நிறுவனம் கடந்த 24 ஆம் திகதி ஒலிபரப்பிய செய்தி முற்றும் முழுதாகத் தவறானது. அது குறித்து ஆரம்ப விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. அதன் பின்னரே அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்துச்செய்யும் முடிவு எடுக்கப்பட்டது. தவறான - பொய்யான - காரணங்களைக் கற்பிதம் செய்து மனுதாரர் இந்த மனுவைத்தாக்கல் செய்துள்ளார். ஆகவே எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு வழங்காமலேயே இந்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்." - என அவர் தெரிவித்தார்.

அரச சட்டத்தரணியின் இந்த வாதத்தை மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி ஆட்சேபித்தார். உரிய விசாரணை நடத்தப்படாமலேயே ஒலிபரப்பு உரிமம் ரத்துச் செய்யப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்காமல் மனுவை ரத்துச் செய்ய வேண்டும் என்ற அரச தரப்பின் ஆட்சேபனை அடங்கிய வாதத்தை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கை 16 ஆம் திகதி வரை ஒத்திவைத்தது.

சம்பந்தப்பட்ட ஒலிபரப்பு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த அலைவரிசையை மேற்படி 16 ஆம் திகதி வரை வேறு எவருக்கும் மாற்றி வழங்காமல் இருப்பதை தாம் உறுதிப்படுத்துகின்றார் என எதிர்மனுதாரர்களுள் ஒருவரான தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு அதிகார சபையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார். (சி)

## உயர் நீதிமன்றிலும் தனி மனுத் தாக்கல்

கொழும்பு, 30

'சூரியன் எவ்.எம்.' உட்பட்ட ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு உரிமத்தை அரசு ரத்துச் செய்தமையை ஆட்சேபித்து அந்த நிறுவனம் நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றையும் தாக்கல் செய்தது.

மேற்படி உரிமம் ரத்தானதை ஆட்சேபித்து அந்த நிறுவனம்கொழும்பு மேன்முறையீட்டு மன்றில் தாக்கல் செய்திருக்கும் மனுவுக்கு மேலதிகமாகவே உயர் நீதிமன்றில் இந்த மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னணியிலேயே அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. (சி)

# இன்று நடைபெறும் உதைபந்தாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 30

வடமராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்குகிடையில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

*18 வயதுப்பிரிவு*

காலை 8 மணி தொடக்கம்

* தேவரையாளி இ.க. எதிர் உடுப்பிட்டி ஏ.எம்.சி.
* கொற்றாவத்தை அ.மி.த.க. எதிர் விக்னேஸ்வரா வித்தியாலயம்.
* அல்வாய் வடக்குறோ.க. எதிர் மணற்காடு றோ.க.
* ஹாட்லி கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம.வி.

*16 வயதுப்பிரிவு*

பிற்பகல் ஒரு மணி தொடக்கம்.

* ஹாட்லிக் கல்லூரி எதிர் தேவரையாளி இ.க.
* உடுப்பிட்டி எதிர் ஞானாசாரியார்.
* கொற்றாவத்தை அ.மி.த.க. எதிர் அல்வாய் வடக்கு றோ.க.
* நெல்லியடி ம.ம.வி. எதிர் விக்னேஸ்வரா.

* * *

வலி.வடக்கு, ஒக். 30

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட கல்விக்கோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிகளின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.15 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்.

*16 வயதுப்பிரிவு*

* மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி

*18 வயதுப்பிரிவு*

* இளவாலை புனித கொன்றியரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
* மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் வசாவிளான் ம.ம.வி.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்ட விவரங்கள்.

*16 வயதுப்பிரிவு*

* அராலி இந்துக் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.
* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

*18 வயதுப்பிரிவு*

* வட்டுக்கோட்டை மத்தியகல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறும் ஆட்டங்களின் விவரங்கள்:-

*16 வயதுப்பிரிவு*

* ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

*18 வயதுப்பிரிவு*

* ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

*(5 ஆம் பக்கமும் பார்க்கவும்)*

## பிரதேச செயலகங்களில் சிறுவர் முதியோர் தின விழாக்கள்

உடுவில் பிரதேச செயலக முதியோர் தினவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் செல்வி மஞ்சுளாதேவி தனபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி. ப.சிவலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நன்நடத்தை மாவட்ட இணைப்பாளர் திருமதி க.சிவராஜா, சமூகநலத்துறை திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் த.கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பாடசாலை மட்டத்தில் சிறுவர் முதியோர் தினத்தை யொட்டி இடம் பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் உடுவில் பிரதேசசெயலக மட்டத்தில் முதல் 11 இடங்களை பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன.

* * *

சங்கானை, ஒக். 30

சர்வதேச சிறுவர் முதியோர் தினவிழா இன்று காலை 9.30 மணிக்கு வலி மேற்கு பிரதேசசெயலகத்தில் இடம்பெறவுள்ளது.பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கேகணேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

# தமிழ்நாடு செங்கல்பட்டு முகாமிலிருந்து இலங்கை அகதிகள் மூவர் தப்பியோட்டம்

தமிழகம் செங்கல்பட்டுப் பிரதேசத்திலுள்ள விசேட அகதிகள் முகாமிலிருந்து விடுதலைப் புலிகள் என்று கருதப்படும் மூன்றுபேர் தப்பியோடியதை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

செங்கல்பட்டில் இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாம் செயல்பட்டு வருகிறது. அங்கு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் உரிய கடவுச்சீட்டு இல்லாமல் இந்தியா வந்தவர்கள், போதைப் பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாமலிருந்தே நேற்றுமுன் தினம் தவராஜா, குணராஜ் மற்றும் விஜயபாண்டி ஆகிய மூன்றுபேர் தப்பியோடியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு அங்கு பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. இதனைப் பயன்படுத்தி யாரும் இல்லாத நேரத்தில் முகாமுக்குள் உள்ள மரத்தின் கிளை வழியாக மதில் சுவரைத் தாண்டி குதித்து அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய மூவரும் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான இலங்கைத் தமிழர்கள் என்றும் அவர்கள் போதைப் பொருள் வழக்கில் கைதானவர்கள் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றார்.

இவர்கள் தப்பியோடிய தகவல் அறிந்ததும் காஞ்சிபுரம் மாவட்ட பொலிஸார் முகாமுக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்கள். தப்பியோடிய மூன்றுபேரையும் பிடிக்க கியூ பொலிஸார் தேடுதல் நடத்துகின்றனர் எனவும் கூறப்பட்டது. (சி)

# மின்பாதுகாப்பு குறித்து இன்று பல்கலையில் விளக்கவுரை

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் மின் பாதுகாப்பு குறித்து விளக்கக் கருத்தரங்கு இனறு செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகத்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வடமாகாண தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர் சி.மகேந்திரராஜன் "மின் லேசர் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் மின் ஊட்டலினால் ஏற்படும் மரணங்களையும் மின் தொகுதியின் குறுக்கு மின்னோட்டத் தினால் ஏற்படும் தீவிபத்துக்களையும் உயர் மின் அழுத்த வேறுபாட்டினால் மின் தொகுதியில் ஏற்படும் அபாய விளைவுகளையும் தவிர்க்கும் வழி முறைகள் குறித்து இக் கருத்தரங்கில் விளக்கம் அளிககப்படும் எனத் தெரி விக்கப்பட்டது. (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 14 | புதன்கிழமை |
| | 31.10.2007 |
| திதி : ஷஷ்டி | முன்னிரவு: 10.41 |
| நட்சத்திரம் : | திருவாதிரை |
| | பிற்பகல் : 12.50 |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு அரசுக்கு ஆசிரியர்கள் டிசெ. 31 வரை காலக்கெடு

கொழும்பு, ஒக். 30

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை இவ்வருடம் முடிவுக்குள் - டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குமுன் - தீர்த்துவைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் பெரியளவில் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றன என்று ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய .இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இவ்விடயம் தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி இம்மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கத் தீர்மானித்தோம்.

ஆனால் அமைச்சரவை இந்த டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் ஆசிரியர்களின் சம்பளப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளதோடு எமது வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறும் வேண்டுகோள் விடுத்தது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை எம்மிடம் தெரியப்படுத்தினார். இது ஓர் அமைச்சின் தீர்மானமாக அல்லாது அமைச்சரவையின் தீர்மானமாகவிருப்பதால் இத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு எமது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட நாம் முடிவெடுத்தோம்.

இந்த விடயத்தில் அரசிற்கு நாம் கொடுக்கின்ற இறுதிக் கால அவகாசம் இதுதான். அமைச்சரவை கூறியதுபோல் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் எமது பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிப்போம்.

அதன்பிறகு அரசு வழங்கும் எந்தவித வாக்குறுதிகளையும் நாம் ஏற்கமாட்டோம். ஒரே மூச்சில் எமது கோரிக்கைகளை நாம் வென்றெடுக்கப் போராடுவோம். - என்றார். (சி)

# கம்பளையில் 14 பேர் கைது

கொழும்பு, ஒக். 30

கம்பளை மாவட்டத்தில் நேற்றுக் காலை பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 14 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கம்பளை நகரம், உலப்பனை, குறுந்துவத்தை, தொலஸ்பாகே, மாவத் துற, அட்டப்பாகு, கணபதிவத்தை, நாவலப்பிட்டி மற்றும் மகர ஆகிய பகுதிகளிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# ஆற்றில் வான் வீழ்ந்ததில் அறுவர் பலி! நால்வர் காயம்

## எட்டியாந் தோட்டையில் பரிதாபம்

கொழும்பு,ஒக்.30

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து மஸ்கெலியா நோக்கிச் சென்ற வான் ஒன்று நேற்று அவிசாவளை எட்டியாந்தோட்டை துன்கிந்த எனுமிடத்தில் ஆற்றில் வீழ்ந்ததில் வானில் பயணித்த ஆறு பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.

அவ்வானில் இருந்த ஆறுபேர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களின் சடலங்கள் எட்டியாந்தோட்டை கித்துல்கல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்த ஆறுபேரும் அதே வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றதாக எட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமான ஆறு பேரும் காயமடைந்த நால்வரும் மஸ்கெலிய நகரைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இரண்டு வயதுக் குழந்தை, 10 வயதுச் சிறுவன், இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள் ஆகியோரே பலியாகியுள்ளனர். கிலக்சி (வயது-4), எலிசபெத் (வயது-52), நவரத்தினம் (வயது-32), வான்சாராதி லெனின் (வயது-35) ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தில் காணாமற்போனோரைத் தேடும் பணி தொடர்வதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருந்து திரும்பிய தமது உறவினர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து மஸ்கெலியாவுக்கு அழைத்துச்சென்றவேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று எட்டியாந்தோட்டைப் பொலிஸார் கூறினர். (சி)

# கடும் மழை பெய்யும் அறிகுறி

கொழும்பு, ஒக்.30

அடுத்து வரும் நாள்களில் நாட்டின் பல பகுதிகளில் பருவப்பெயர்ச்சி மழை கடுமையாகப் பொழியக் கூடும் என வானிலை அவதான மையம் எச்சரிக்கை விடுத்திருக் கிறது.

மேல், மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் இருப்பதாகவும் அந்த மையம் மேலும் குறிப்பிட்டிருக்கிறது. (சி)

# ஜனாதிபதி மஹிந்தரின் கொடும்பாவியை எரிக்க முயன்ற 30 பேர் கோவையில் கைது!

கோவை, ஒக். 30

அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீதான தாக்குதலை நடத்திய கரும்புலிகளின் சடலங்களை நிர்வாணமாக்கி, மக்கள் பார்வைக்கு அவற்றை வைத்தமையை ஆட்சேபித்து நேற்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாணக் கொடும்பாவியை கடும் மழைக்கு மத்தியில் எரிக்க முயன்ற பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த முப்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

கோவை செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் முன்பாக நேற்று முற்பகல் 11.00 மணிக்கு பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் மஹிந்தவின் நிர்வாணக் கொடும்பாவியை அவர்கள் எரிக்க முயற்சித்தனர்.

ஆனால் அங்கு பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினர் கொடும்பாவியை எரிக்க விடாமல் தடுத்து, அதனைப் பறித்துச் சென்றனர். கொடும்பாவியை எரிக்க முயற்சித்தனர் என பெரியார் திராவிடர் கழகத்தினர் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை அரசுக்கு எதிராக அப்போது கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதேசமயம், சென்னையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று மாலை 4.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் இதற்குத் தலைமை வகித்தார்.

பெரியார் திராவிடர் கழக நிர்வாகிகள் கேசவன், அன்பு, தனசேகரன், தபசிகுமரன் மற்றும் தமிழக மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த பாலன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## தமிழகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லோர மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

தொடரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக விருத்தாசசலம், பெரம்பலூர் மாவட்டங்களில் பல கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மழை, புயல் எச்சரிக்கை காரணமாகப் பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## உயிர் அச்சுறுத்தலால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரியை தனது கணவருடன் சேர்ந்து கொள்ள வசதியாக கிளிநொச்சி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் வழங்குமாறு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கு அமைய பிரஸ்தாப ஆசிரியைக்கு கிளிநொச்சி வலயத்துக்கு இடமாற்றம் வழங்கும் கடிதத்தை கல்வியமைச்சுச் செயலாளர் நீதிமன்றுக்கு அனுப்பி இருந்தார்.

இந்த விடயம் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா முன் நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

பிரஸ்தாப ஆசிரியை கிளிநொச்சி செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாட்டைச் செய்யுமாறு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு உத்தரவு வழங்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார். (அ-1)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் அரசு நீண்டகாலமாகப் போரை நடத்திவருவதால் அரசு முகங்கொடுக்கும் சவால்களைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

ஆனாலும் -

பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்திற்கு (ரி.ஐ.டி.) எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விரைவாக விசாரணைகளை மேற்கொள்வது அவசியம்.

தடுத்துவைக்கப்பட்டிருப்போருக்கு எதிரான சித்திரவதைகளையும் கொடுமைப்படுத்தல்களையும் விசாரிப்பதற்கு உடனடியாக விசேட நீதிமன்றங்கள் நிறுவப்படவேண்டும்.

தூக்குத்தண்டனை வழங்கும் முறை நிறுத்தப்படவேண்டும். அவை ஆயுள் தண்டனையாக மாற்றப்படவேண்டும் - பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் சித்திரவதைகள் வழமையாகிவருகின்றன - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்பன இத்தாக்குதலின்போது சேதமடைந்துள்ளன.

இப் பிரதேசப் பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குண்டுவீச்சு விமானங்களின் சத்தம் கேட்டுப் பாதுகாப்புத்தேடிச் சிதறி ஓடினர்.

அந்தப் பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கை நேற்று முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறை முகாம் ஒன்றின் மீதே விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தேசிய ஊடக பாதுகாப்பு மத்திய நிலையம் கொழும்பில் தெரிவித்தது. (சி)

## முருங்கனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதலின் பின்னர் அந்தப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும், விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இந்த மோதல் தொடர்பாக எதுவிதத் தகவல்களும் வெளிவரவில்லை.

இதேவேளை, மட்டக்களப்பு களுவங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் 12 மணியளவில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் கைக்குண்டு -01 மற்றும் கைத்தொலைபேசி - ஒன்று ஆகியன மீட்கப்பட்டன என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டிருக்கிறது. (சி)

## இரவு நேரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கட்டி ஓர் அறைக்குள் தள்ளிவிட்டனர். அடுத்த அறையில் இருந்த மகனுடன் அவர்கள் கதைத்தது கேட்டது.

சிலமணி நேரத்தில் நான் வெளியே சென்றேன். அருகில் இருந்த கடற்படையின் காவலரணில் இருந்தவர்களை அணுகி, கைக்கட்டுகளை அவிழ்த்துவிடுமாறு கேட்டேன். அவர்கள் முதலில் மறுத்தனர். பின்னர் கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்டனர்.

பின்னர் வீட்டில் வந்துபார்த்தபோது மகனைக் காணவில்லை. விடிந்ததும் கிராமசேவையாளரிடம் மகனைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்தேன்.

பின்னர் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தேன். நண்பகல் 12.30 மணியளவில் பொலீஸார் வீட்டுக்கு வந்து சோதனை நடத்தினர். அப்போது மகனின் சடலத்தை சூட்டுக்காயங்களுடன் மீட்டனர். அவரது கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. சடலத்தை அடையாளம் காட்டினேன் - என்றார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் தந்தையிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## ரஷ்யா, இஸ்ரேல், செக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தளம் ஒன்று வெளியிட்டிருக்கின்றது.

மேற்படி நாடுகள் இலங்கைக்கு யுத்த விமானங்கள் மற்றும் பயிற்சி வழங்கல் வான்கலங்களை வழங்குவதற்கு இணங்கியிருக்கின்றன என அரசின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

'மிக் - 24' வான் கலத்தை விட வலிமையானதும் செயற்பாட்டுத் திறன் கொண்டதுமான 'கமோவ் கா-60' ரக ஹெலிகளை வழங்குவதற்கான தனது விருப்பத்தை ரஷ்யா வெளிப்படுத்தியிருக்கின்றது.

'எம்.ஐ.24' யுத்த வான்கலங்கள் உட்பட எட்டு வான்கலங்கள் அழிக்கப்பட்டமையால் இலங்கை விமானப்படையின் வலிமை குன்றிவிட்டதாகப் புலிகளும், புலிகள் சார்பு ஊடகங்களும் கூறுவதை சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் அடியோடு நிராகரித்தார்.

"இலங்கைக்கு வான்கலங்களையும் ஆயுதங்களையும் வழங்க நேட்டோ நாடுகள் மறுத்துவிட்டன என்ற வதந்தியைப் புலிகளும், புலிகளுக்குச் சார்பான ஊடகவியலாளர்களும் பரப்பி வருகின்றனர். அது தவறு. ஆனாலும், ரஷ்யா உட்பட நட்பு நாடுகள் இலங்கைக்கு விமானங்களை வழங்குவதற்கான இணக்கத்தைத் தெரியப்படுத்தியுள்ளன. மிக நவீனரக - உயர்ந்த தர - 'ராடர்' கருவிகளை வழங்குவதற்கு செக்கோஸ்லேவாக்கியா முன்வந்துள்ளது" - என்றும் அந்தச் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி கூறினார்.

- இப்படி அந்த இணையத்தளச் செய்தி மேலும் தெரிவித்தது. (சி)

**Physics**
**சடப்பொருளியல்**
ஆரம்பம்:-
31.10.2007 Wed. 6.30am
திங்கள், புதன் 6.30-7.30am
**By.K.Selvan**
**NAVALAR**
Academy, Jaffna.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவகாமிப்பிள்ளை (தங்கம்மா)

காரைநகர், குண்டங்கரை, களபூமியைச் சேர்ந்த கந்தையா சிவகாமிப்பிள்ளை நேற்று (29.10.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. அம்பலலிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org